துரை செய்துள்ளார். அதற்கு அரசாங்கம் ஒப்புதல் தந்தால் கருத்துரு ஒன்றை அனுப்புவதாகக் கூறியுள்ளார். அந்த அடிப்படையில் தனியாக அமைக்கலாமா என்பது அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, இந்த அருங்காட்சியகம் உயிர் போன பிராணிகளையும் ஒன்றாக வைத்து, அதை நடத்துகின்ற இயக்குநர் உயிர் கலையிலே மட்டும் பயிற்சி பெற்றவராக இருப்பதால், சிற்பம், கலைத்துறையில் போதிய அக்கறை இல்லாமல் இருப்பதன் காரணத்தால், தனிப்படுத்துவதில் போதிய அக்கறை காட்டாமல் தனி அமைப்பு வேண்டும் என்ற நிலையை மறுத்தார் என்று பின்னால் இப்பொழுது அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து பரிந்துரை செய்திருப்பதாகவும் அறிகிறேன். "அரசு அனுமதித்தால்" என்று அமைச்சர் அவர்களே சொல்ல வேண்டாம். அரசு அனுமதித்து அதைச் செயல் படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலில் குறிப்பிட்டதற்குக் காரணம் நமது நாட்டிலிருக்கின்ற பிற அருங்காட்சியகங்களும் வெளிநாட்டிலுள்ள அருங்காட்சியகங்களும் பல்வேறு துறைகளைக் கொண்டதாக விளங்குகின்றன. புதைப்பொருள், சிற்பம், சிலை, மக்கள் நாகரீகம், புவியியல், தாவர இயல், விலங்கியல் போன்ற பிரிவுகள் அடங்கியதாக விளங்குகின்றன. அந்த முறையில்தான் கருத்து வழங்கப்பட்டது. இப்பொழுது தனியாக, அதற்கு உட்பட்ட அருங்காட்சியகமாக, சிற்பங்கள், சிலைகள், சித்திரங்கள், கைவேலைப்பொருள்கள் ஆகியவற்றை மட்டும் பிரித்து வைப்பதற்கு முயற்சி மேற்கொள்கின்ற அளவுக்கு அரசு அனுமதி கேட்கப் பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொண்டு, அந்த அளவுக்கு நிறைவேற்ற அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Art Gallery, Thanjavur

*8 Q.—THIRU SAW. GANESAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal to take over the Art Gallery, Thanjavur under the direct control of the Government of Tamil Nadu, i.e., under the administrative control of Archaeological Department; and

(*b*) if so, the time within which the transfer will take place?

தஞ்சைக் கலைக் கூடம்

திரு. சா. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சையில் உள்ள கலைக் கூடத்தை Art Gallery தமிழக அரசின் நேரடி நிர்வாகத்தில்—அதாவது பழம்பொருள் ஆய்வுத் துறை நிர்வாகத்தில் எடுத்துக்கொள்ளும் திட்டம் உண்டா ?

(இ) ஆமெனில், எத்துணை காலத்தில் நிர்வாக மாற்றம் ஏற்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தஞ்சையில் உள்ள கலைக் கூடத்தை தமிழக அரசின் நேரடி நிர்வாகத்தில் ஏற்கும் திட்டம் தற்போது இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, ஏற்கெனவே அங்கேயுள்ள ரெவின்யூ இலாகாவின் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அதிலே ஏற்படுகின்ற புனருத்தாரண வேலைகள் அல்லது செம்மைப்படுத்துகின்ற வேலைகள், பிரசர்வேஷன், கன்சர்வேஷன் வேலைகள் செய்வதற்குப் போதிய பயிற்சி இல்லாதவர்களாக இருக்கிறார்கள். நான் குறைபாடு ஒன்றும் சொல்லவில்லை. அவர்களுக்குப் பயிற்சி இல்லை. ஆகவே அதைப் பழம்பொருள் ஆய்வுத்துறையோடு இணைத்தால், செம்மையாக, நிலையாக நின்று பயன்தரக் கூடியதாக இருக்கும் என்பதை உணர்ந்து ஏற்கெனவே அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறேன். அமைச்சர் அவர்களும் இந்தக் கருத்தை ஒத்துக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்க, இப்பொழுது ஏன் வேண்டாததுபோல் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது ? இந்த அவசியத்தை, இன்றியமையாமையை உணர்ந்து அதைப் பழம்பொருள் ஆய்வுத்துறையோடு இணைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது தஞ்சை கலைக் கூடத்தின் நிர்வாகம் ஒரு செயற்குழுவின் மூலம் செவ்வனே பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தச் செயற்குழுவின் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கலந்துகொண்டுதான், அந்தக் குழு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இப்பொழுது அதன் நிர்வாக அமைப்பு ஒரு தனிக் குழுவினிடம் இருக்கிறது. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கின்றார். இதற்கான நிதி ராஜா டிரஸ்டிலிருந்தும், பார்வையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற

1973 நவம்பர் 21]

கட்டணத்தின் மூலமாகவும் கிடைக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், பராமரிப்பது, இன்னும் மற்ற வகைகளில் அந்தச் செயற் குழுவைச் சேர்ந்தவர்கள் கவனிக்க முடியுமா என்பதை ஆராய்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் கலந்து அதை ஒரு துணை தொல் பொருள் ஆய்வுக் கூடமாக அமைக்கலாமா என்ற கருத்து இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கலந்து முடிவு எடுக்க முயற்சிக்கப்படும்.

College Text Books for Libraries

*9 *Q*.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that College Text-Books have been purchased for the libraries of the Government High Schools; and

(*b*) if so, the reason for the same?

நூலநிலையங்களுக்குக் கல்லூரிப் பாடத் தரமுள்ள நூல்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளி நூலகங்களுக்குக் கல்லூரிப் பாட நூல்கள் வாங்கப் பெற்றிருக்கின்றன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) உயர்நிலைப் பள்ளிகளில் அமைந்துள்ள நூல் நிலையங்களுக்கென 1972-73-ல் சுமார் ரூ. 1 லட்சம் மதிப்புள்ள தமிழ் நூல்கள் அரசுச் செலவில் சுமார் 200 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன. அவைகள் கல்லூரிப் பாடத் தரமுடையனவாய் இருப்பினும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தித் தம் தகுதியையும் பொது அறிவையும் வளர்த்துக் கொள்ள உதவுவனவேயாகும்.

Age of Retirement of Teachers

*10 *Q*.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of India have suggested in their letter No. F1-5/67 ESE-6, that the age of retirement of teachers, who have received National Awards may be extended by five years subject to their being found physically and mentally fit;